**செய்தி வெளியீடு எண்:348** **நாள் : 16.07.2015**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.7.2015 அன்று தலைமைச் செயலகத்தில், 2015–2016ஆம் கல்வியாண்டில் 11–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு 6,15,518 விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக 5 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

தமிழகத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில், மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவியர் அனைவருக்கும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2001–2002ஆம் கல்வி ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்டது. பின்பு, 2005–2006ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பிரிவு மாணவ, மாணவியருக்கும் இத்திட்டத்தின் கீழ் மிதிவண்டிகள் வழங்கப்பட்டு மாணவ, மாணவியர் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

2015–2016ஆம் கல்வியாண்டில், 233 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் 11–ஆம் வகுப்பு பயிலும் 2,73,592 மாணவர் மற்றும் 3,41,926 மாணவியர் என மொத்தம் 6,15,518 மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை தலைமைச் செயலகத்தில் வழங்கி, அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டுமென்று வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து மிதிவண்டிகளைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவியர் சிரமமின்றி பள்ளிக்கு சென்று வர மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு என். சுப்ரமணியன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு கே.சி. வீரமணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். அப்துல் ரஹீம், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 16.7.2015